**Hallo**
**Basel-Stadt**

Kanton Basel-Stadt

# சேர்ந்து வாழுதலும் குழந்தைகளும்

சேர்ந்து வாழுதல்
பெற்றோரின் உரிமைகளும் பொறுப்புகளும்
பெற்றோராயிருத்தல்
பிள்ளைகள் பராமரிப்பு
குடும்பம் ஒன்றிணைதல்
மோதல்

# சேர்ந்து வாழுதல்

சுவிட்சர்லாந்தில் மக்கள் ஒன்றாக வாழ பல்வேறு வழிகள் உள்ளன. நீங்கள் திருமணம் செய்ய விரும்பினால், உங்களுக்கு குறைந்தபட்சம் 18 வயது இருக்க வேண்டும். கணவன் மனைவி இருவருக்கும் ஒரே உரிமை உண்டு.

## ஒன்றாக வாழுதல்

சமீபத்திய தசாப்தங்களில் சுவிட்சர்லாந்தில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெரும்பாலும் திருமணமாகாத தம்பதிகள் (துணைவர், Konkubinat) ஒன்றாக வாழ்கிறார்கள். தம்பதியருக்கு ஒன்றாகக் குழந்தைகளும் உள்ளனர். கணவன் மனைவி இடையே யார் என்ன பாத்திரம் வகிப்பது என்று நிலையான பிரிவு இல்லை. இதன் பொருள் பெண்களும் ஆண்களும் உறவில் குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதில்லை.
ஒரே பாலினத்தவர்களும் ஒன்றாக வாழ அனுமதிக்கப்படுகிறார்கள், உதாரணமாக ஒரு ஆணுடன் ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணுடன் ஒரு பெண்.மற்ற ஜோடிகளுக்கு உள்ள அதே உரிமை இவர்களுக்கும் உள்ளன. மேலும் இவர்கள் திருமணம் செய்து கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

## திருமணம்

சுவிட்சர்லாந்தில் 18 வயதிலிருந்து மட்டுமே திருமணம் செய்து கொள்ள முடியும். ஒரே பாலின ஜோடிகளும் திருமணம் செய்து கொள்ளலாம்: ஒரு ஆண் ஒரு ஆணை திருமணம் செய்து கொள்ளலாம் மற்றும் ஒரு பெண் ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்ளலாம். நீங்கள் திருமணம் செய்து கொள்ள விரும்பினால், நீங்கள் Basel-Stadt மாநிலத்தில் சார் பதிவாளர் அலுவலகத்தில் (Zivilstandsamt) பதிவு செய்ய வேண்டும். பின்னர் சார் பதிவாளர் அலுவலகம் 'திருமண தயாரிப்பு நடைமுறையைத்' தொடங்குகிறது. இந்த நடைமுறை மூலம் திருமணம் தயார் செய்யப்படுகிறது. எடுத்துக்காட்டாக மணமக்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்களா என்பதை அலுவலகம் சரி பார்க்கிறது. செயல்முறை முடிந்ததும், நீங்கள் 3 மாதங்களுக்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இந்த நடைமுறை எவ்வாறு செயல்படுகிறது மற்றும் இதற்கு உங்களுக்கு எந்தெந்த ஆவணங்கள் தேவைப்படும் என்பதைச் சார்பதிவாளர் அலுவலகம் உங்களுக்குத் தெரிவிக்கும்.
ஒருவேளை ஒரு துணைவர் இன்னும் வெளிநாட்டில் இருக்கிறார் எனில் நீங்கள் உங்கள் துணைவர் சுவிட்சர்லாந்துக்குள் நுழைய அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம் (திருமண ஏற்பாடு). அதன்பின் நீங்கள் இருவரும் சுவிட்சர்லாந்தில் திருமணம் செய்துக் கொள்ளலாம்.
ஒருவேளை நீங்கள் போலித் திருமணத்தில் (Scheinehe) நுழைகிறீர்கள் என்ற ஒரு சந்தேகம் சார் பதிவாளர் அலுவலகத்திற்குத் தோன்றலாம். போலித் திருமணம் என்றால்: நீங்கள் திருமணம் செய்து கொள்வதின் மூலம் துணைவர் ஸ்விட்சர்லாந்தில் வசிக்க முடியும் என்ற ஒரே காரணத்திற்காக திருமணம் செய்து கொள்வது. சார்பதிவாளர் அலுவலகம் இந்தத் திருமணத்தை ஏற்க மறுக்கலாம். நீங்கள் ஏற்கனவே திருமணம் செய்திருந்தால் அலுவலகம் இந்தத் திருமணம் செல்லாது என்றும் அறிவிக்கலாம். எனில் இந்த திருமணம் மீண்டும் கலைக்கப்படும். அல்லது ஒருவேளை நீங்கள் போலித் திருமணத்தின் விளைவாக உங்கள் குடியிருப்பு அனுமதியையும் இழக்க நேரிடும்.

## உரிமைகளும் பொறுப்பும்

சட்டத்தின்படி வாழ்க்கைத் துணைவர்கள் இருவருக்குமே அதே உரிமைகள் மற்றும் கடமைகள் உள்ளன. திருமணத்தில் அவர்களுக்கு சம உரிமை உண்டு. சேர்ந்து வாழும் இருவரும் தானாக முன்வந்து திருமணம் செய்து கொள்ள வேண்டும். கட்டாய திருமணத்தில் (Zwangsheirat) மணமுடிக்கும் ஒரு நபர் திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தப்படுகிறார். இதை அதிகாரிகள் கண்டறிந்தால், திருமணத்தை ரத்து செய்யலாம். மற்றொருவரை திருமணத்திற்குக் கட்டாயப்படுத்தும் நபர் தண்டனைக்கு உள்ளாவார். நீங்கள் திருமணம் செய்து கொள்ள வற்புறுத்தப்படுவதாக உணர்கிறீர்களா? zwangsheirat.ch ஆலோசனை மையம் உங்களுக்கு ஆதரவளிக்கும். அழைப்பு இலவசம். இதன் தொலைபேசி எண்: 0800 800 007

## குடும்பத்தைத் திட்டமிடல்

குடும்பக் கட்டுப்பாடு, கர்ப்பம் மற்றும் பாலுணர்வு பற்றி உங்களிடம் கேள்விகள் உள்ளதா? Basel-Stadt மாநிலத்தில் இதற்கான ஆலோசனை மையங்கள் உள்ளன. இந்த மையங்கள் உதாரணமாகக் கருத்தடை, பாலியல் பிரச்சனைகள், பாலியல் ஆரோக்கியம், பாலியல் நோய்கள் அல்லது விருப்பமற்ற தற்செயலான கர்ப்பம் போன்ற பல்வேறு தலைப்புகளில் தகவல்களை வழங்குகின்றன. உங்களுக்கு குழந்தை பிறக்கப் போகிறதா அல்லது உங்களுக்கு ஏற்கனவே குழந்தைகள் உள்ளதா அனைவருக்கும் இவர்கள் ஆலோசனை வழங்குகிறார்கள்.

## விவாகரத்து

நீங்கள் திருமணம் ஆனவரா? விவாகரத்து வேண்டுமா?எனில் நீங்கள் Basel-Stadt குடும்பவியல் நீதிமன்றத்தில் (Zivilgericht) விவாகரத்துக்கு விண்ணப்பிக்கலாம். நீங்கள் தனியாக விவாகரத்துக் கோரலாம் அல்லது உங்கள் துணைவருடன் சேர்ந்து விவாகரத்துக் கோரலாம்.
வெளிநாட்டில் திருமணம் நடந்ததா? அப்போதும் சுவிஸ் சட்டப்படி விவாகரத்து பெறலாம். ஆனால் நீங்கள் சுவிட்சர்லாந்தில் குறைந்தது ஒரு வருடமாவது வாழ்ந்திருக்க வேண்டும். மேலும் சுவிட்சர்லாந்து உங்கள் தலைமை வசிப்பிடமாக இருக்க வேண்டும். விவாகரத்து உங்கள் குடிமை நிலையை மாற்றலாம். சில சமயம் விவாகரத்துக்குப் பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்தில் வாழ அனுமதிக்கப்படமாட்டீர்கள். நீங்கள் உள்நாட்டு குடியுரிமையை குடிமை குடியுரிமை தரப் போகிறீர்களா? எனில் விவாகரத்துக்கு பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்து குடியுரிமையைப் பெற முடியாமலும் போகலாம்.
விவாகரத்துக்குப் பிறகு நீங்கள் சுவிட்சர்லாந்தில் தங்க அனுமதிக்கப்படுவீர்களா? திருமணம் மற்றும் குடும்பங்களுக்கான ஆலோசனை மையம் அல்லது சட்ட ஆலோசனையை மையத்தைக் கேட்பது சிறந்தது. நீங்கள் குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டிருந்தால் சிறப்பு விதிகள் உள்ளன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/partnership

# பெற்றோரின் உரிமைகளும் பொறுப்புகளும்

நீங்கள் குழந்தைப்பேறு பெற்றால், உடனடியாக பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பைத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் திருமணமானவராக இருந்தால் குழந்தையின் பராமரிப்பு தானாகவே முறைப்படுத்தப்படுகிறது. நீங்கள் திருமணம் செய்து கொள்ளவில்லை என்றால், நீங்களே குழந்தையின் பராமரிப்பை ஏற்பாடு செய்ய வேண்டும்.

## பிறப்பைப் பதிதல்

ஒவ்வொரு குழந்தையின் பிறப்பையும் நீங்கள் பதிவாளர் அலுவலகத்தில் **(Zivilstandsamt)** பதிவு செய்ய வேண்டும். எச்சரிக்கை: உங்கள் குழந்தை பிறந்த இடத்தில் உள்ள பதிவு அலுவலகத்திற்கு நீங்கள் செல்ல வேண்டும். எனவே நீங்கள் வசிக்கும் நகராட்சி அலுவலகத்திற்குச் செல்ல வேண்டிய அவசியமில்லை.

குழந்தை மருத்துவமனையில் பிறக்கிறது:

மருத்துவமனை ஆவணங்களைப் பதிவாளர் அலுகத்திற்கு அனுப்புகிறது. இனி நீங்கள் இதைப்பற்றி கவலைப்பட வேண்டியது இல்லை.

குழந்தை மருத்துவமனையில் பிறக்கவில்லை:

நீங்கள் வீட்டில் அல்லது வேறு எங்காவது உங்கள் குழந்தையைப் பெற்றிருக்கிறீர்கள். அப்படியானால் நீங்களே தான் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பைப் பதிவு செய்ய வேண்டும். இதைச் செய்ய உங்களுக்கு மூன்று நாட்கள் உள்ளன. நீங்கள் எந்த ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதைப் பதிவாளர் அலுவலகம் உங்களுக்குத் தெரிவிக்கும்.

தெரிந்து கொள்வது நல்லது:

ஒரு குழந்தை சுவிட்சர்லாந்தில் பிறப்பது மூலமாக அது சுவிட்சர்லாந்தின் குடிமகனாகவோ அல்லது குடிமகளாகவோ ஆக முடியாது. அது தானாகவே சுவிஸ் குடியுரிமையைப் பெற முடியாது

## தந்தைக்கான அங்கீகாரம்

உங்களுக்குத் திருமணம் ஆகி ஒரு குழந்தையைப் பெறுகிறீர்கள்:

கணவர் தானாகவே தந்தையாக பதிவு செய்யப்படுகிறார். ஒருவேளை கணவர் தான் தந்தை அல்ல என்று நம்புகிறார் எனில் அவர் நீதிமன்றத்திற்குச் சென்று தன் தந்தைமையை மறுக்கலாம்.

உங்களுக்குத் திருமணம் ஆகவில்லை, குழந்தையைப் பெறுகிறீர்கள்:

குழந்தையின் தந்தை தானாகவே தந்தையாகப் பதிவு செய்யப்படமாட்டார். அவர் குழந்தையின் பிறப்புக்கு முன் அல்லது பிறப்பிற்குப் பின் பதிவு அலுவலகத்திற்குச் சென்று குழந்தையை அங்கீகரிக்க வேண்டும். ஒருவேளை தந்தை தனது குழந்தையை அங்கீகரிக்க விரும்பவில்லை என்றால், பின் தாய் நீதிமன்றத்திற்குச் சென்று குழந்தையை அங்கீகரிக்குமாறு அங்கு அவரிடம் கோரலாம்.

## பெற்றோரின் அக்கறை

ஒரு பெற்றோராக உங்கள் குழந்தைகள் நலமாக இருப்பதை நீங்கள் உறுதி செய்ய வேண்டும். இது உங்கள் உரிமை மற்றும் கடமை (பெற்றோர் பொறுப்பு,, elterliche Sorge). உதாரணமாக நீங்கள் உங்கள் குழந்தைகளை வளர்க்க வேண்டும், அவர்கள் வாழ்க்கைக்கான செலவுகளைச் செய்ய வேண்டும். மேலும் அவர்களுக்கு 18 வயது ஆகும் வரை நீங்கள் உங்கள் குழந்தைகளைச் சட்டபூர்வமாகப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும்.
நீங்கள் திருமணம் ஆனவர்கள்:
உங்கள் பிள்ளைகள் மேல் உங்கள் இருவருக்கும் ஒரே உரிமைகளும் கடமைகளும் உள்ளன.
உங்களுக்குத் திருமணம் ஆகவில்லை:
முதலில் தந்தை குழந்தையை அங்கீகரிக்க வேண்டும். அதன் பிறகு நீங்கள் இருவரும் சேர்ந்து உங்கள் குழந்தையைப் பார்த்துக் கொள்ள விரும்புவதாக (gemeinsame elterliche Sorge) எழுத்துப்பூர்வமாக இருவரும் தானாக முன்வந்து அறிவிக்கலாம். பதிவு அலுவலகத்தில் தந்தை குழந்தையை அங்கீகரிக்கும் நேரத்தில், நீங்கள் இதைச் செய்யலாம். அல்லது பின்னர் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்திற்கு (Kindesschutzbehörde, கே.இ.எஸ்.பி) செல்லலாம்.
இந்தக் குழந்தை பராமரிப்பிற்கு நீங்கள் உடன்படவில்லை என்றால், குழந்தைகள் பாதுகாப்பு ஆணையம் அதை முடிவு செய்யும்

## பராமரிப்பு

நீங்கள் பிரிந்திருந்தாலும், நீங்கள் இருவரும் உங்கள் குழந்தையைத் ் தொடர்ந்து கவனித்துக் கொள்ள வேண்டும். எனவே குழந்தையை யார் கவனித்துக்கொள்வார்கள், யார் எவ்வளவு பணம் செலுத்துவார்கள் (பராமரிப்பு, Unterhalt).என்பதை நீங்கள் முடிவு செய்யலாம்.
நீங்கள் இருவரும் உங்கள் குழந்தையின் பராமரிப்புக்கு பணம் செலுத்துகிறீர்கள். நீங்கள் மற்ற பெற்றோரை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செலுத்த வேண்டியிருக்கும். நீங்கள் மற்ற பெற்றோரை விட அதிகமாகவோ அல்லது குறைவாகவோ செலுத்த வேண்டியிருக்கும். அல்லது நீங்கள் ஒன்றும் செலுத்த வேண்டியதில்லை.
நீங்கள் எவ்வளவு பணம் சம்பாதிக்கிறீர்கள் மற்றும் குழந்தையை எவ்வளவு கவனித்துக்கொள்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. மற்ற பெற்றோருடன் நீங்கள் உடன்படவில்லை என்றால், நீங்கள் நீதிமன்றத்திற்குச் செல்லலாம்.
ஏதேனும் ஒரு பெற்றோர் தங்கள் பங்களிப்பை செலுத்தவில்லை:
பெற்றோரில் ஒருவர் குழந்தைக்கான பங்களிப்பைச் செலுத்தவில்லை என்றால், நீங்கள் வசிக்கும் நகராட்சியில் உதவி கேட்கலாம். நீங்கள் வசிக்கும் நகராட்சி பணத்தைப் பெற உங்களுக்கு உதவும். ஒருவேளை அது உங்கள் பணமாக இருந்தால், குழந்தை பராமரிப்புக்கு நகராட்சி பணத்தை ஒதுக்கும். இது Alimentenbevorschussung என்று அழைக்கப்படுகிறது.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/parents-rights-and-duties

# பெற்றோராயிருத்தல்

இதைத் தவிர ஒரு குழந்தையை வளர்ப்பது எளிதானது அல்ல. உங்கள் குழந்தைக்கு எது நல்லது என்று நீங்கள் சில சமயங்களில் யோசிக்கலாம். இதைப் பற்றி மற்ற பெற்றோருடன் பேசுவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். பல்வேறு ஆலோசனை மையங்களும் உங்களுக்கு உதவலாம்.

## சந்திக்குமிடங்கள்

தாய்மார்கள் மற்றும் தந்தைகளுக்குப் பல சலுகைகள் உள்ளன. இங்கே நீங்கள் மற்ற பெற்றோருடன் பேசலாம் அல்லது உங்கள் குழந்தையுடன் சேர்ந்து ஏதாவது செய்யலாம்.

- குறுநடை போடும் குழந்தைகள் குழுக்கள் (Krabbelgruppen) சிறு குழந்தைகள் மற்றும் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கானது. இங்கே நீங்கள் மற்ற பெற்றோரை சந்திக்கலாம்.
- பெற்றோர் குழந்தை உடற்பயிற்சி சிறு குழந்தைகளைக் கொண்ட பெற்றோருக்கானது. அவர்கள் ஒன்றாக விளையாடலாம்,உடற்பயிற்சி செய்யலாம் மற்றும் வேடிக்கையாக இருக்கலாம். பெரும்பாலான நகராட்சிகள் ஜிம்னாஸ்டிக்ஸ் வழங்குகின்றன.
- உள்ளூர் சந்திப்பிடங்கள் (Quartiertreffpunkte) பெற்றோர்கள் மற்றும் குழந்தைகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களை வழங்குகின்றன.
- நூலகங்கள் மற்றும் பொம்மையகங்களில் சிறிய மற்றும் பெரிய குழந்தைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்களுக்கான சலுகைகள் உள்ளன.

## பெற்றோர் கல்வி

Basel-Stadt இல் பெற்றோர்களுக்கான பல்வேறு தலைப்புகளில் படிப்புகள் உள்ளன.
புலம்பெயர்ந்தோருக்கான சிறப்பு படிப்புகளும் உள்ளன. உதாரணமாக, சுவிஸ் பள்ளி அமைப்பைப் பற்றிய படிப்புகள் உள்ளன. சில படிப்புகள் மற்ற மொழிகளிலும் உள்ளன.

## வளர்ப்பு பற்றிய ஆலோசனை

உங்கள் குழந்தைகளின் வளர்ப்பு பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், பல்வேறு ஆலோசனை மையங்கள் உதவும்.
உதாரணமாக, உங்களுக்கு 5 வயது வரை குழந்தைகள் மற்றும் சிறு குழந்தைகள் இருந்தால், நீங்கள் பெற்றோரா ஆலோசனை(Elternberatung) செல்லலாம்.
அவசர கேள்விகளுக்கு பெற்றோர் அவசர எண்ணை அழைக்கலாம். இங்கே நிபுணர் ஆலோசனை பெறுவீர்கள். நீங்கள் அழைக்கும் போது சாதாரண தொலைபேசிக்கான கட்டணத்தையே செலுத்துவீர்கள். தொலைபேசி: 0848 35 45 55. அல்லது நீங்கள் மின்னஞ்சல் எழுதலாம். நீங்கள் www.elternnotruf.ch இல் முகவரியைக் காணலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/being-a-parent

# பிள்ளைகள் பராமரிப்பு

குழந்தை பிறந்த பின்பு அநேகமாகத் தாய் தந்தை இருவருமே வேலைக்குச் செல்கின்றனர். அதற்காகத்தான் Basel-Stadt மாநிலத்தில் குழந்தைப் பராமரிப்பு வசதிகள் உள்ளன. பெரும்பாலான சலுகைகளுக்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும்.

## குழந்தைகள் பகல் நேரப் பராமரிப்பகம் (KITA)

பகல்நேர பராமரிப்பு மையங்களில் உங்கள் குழந்தை நாள் முழுவதும் பராமரிக்கப்படும். பகல்நேர பராமரிப்பு மையத்தின் சுருக்கம் கிடா. பெரும்பாலான பகல்நேர பராமரிப்பு மையங்கள் 3 மாதங்கள் முதல் பள்ளி வரையிலான குழந்தைகளுக்கானவை. இருப்பினும், சில பகல்நேர பராமரிப்பு மையங்கள் பள்ளிக் குழந்தைகளை பள்ளிக்கு முன்பும், மதிய உணவு நேரத்திலும், பள்ளிக்குப் பிறகும் கவனிக்கின்றன. காத்திருப்புப் பட்டியல்கள் நீளமாக இருப்பதால், உங்கள் குழந்தையை மிக விரைவாகப் பதிவு செய்ய வேண்டும். பகல்நேர பராமரிப்பு மையங்கள் விலையில் வேறுபடுகின்றன. சில பகல்நேர பராமரிப்பு மையங்களுக்கான செலவில் ஒரு பகுதியை குடியிருப்பு நகராட்சி செலுத்துகிறது. பகல்நேர பராமரிப்பு மையங்கள் மற்றும் நீங்கள் வசிக்கும் நகராட்சி யிடம் எவ்வளவு செலவாகும் மற்றும் உங்கள் குழந்தையை எவ்வாறு பதிவு செய்வது என்று கேட்கலாம்.

## விளையாட்டுக் குழுக்கள்

பல குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு விளையாட்டுக் குழுக்குச் செல்கிறார்கள். விளையாட்டுக் குழுவில் (Spielgruppe), சுமார் 3 வயது முதல் குழந்தைகள் தங்கள் பெற்றோர் இல்லாமல் சந்திக்கிறார்கள். பயிற்சி பெற்ற மேற்பார்வையாளர் குழந்தைகளை சில விளையாட்டுகளில் ஈடுபடுத்தி வைத்திருக்கிறார். குழந்தைகள் உதாரணமாகக், கைவினைப்பொருட்கள் செய்கிறார்கள் மற்றும் ஒன்றாக விளையாடுகிறார்கள், விளையாட்டுக் குழு தன்னார்வமானது.
உங்கள் பிள்ளை வீட்டில் ஜெர்மன் பேசவில்லையா? எனில் அது விளையாட்டுக் குழுவில் ஜெர்மன் மொழியைக் கற்க ஆரம்பிக்கலாம். இது உங்கள் குழந்தை பள்ளியைத் தொடங்கும் போது எளிதாக்கும்.

## நாள் கட்டமைப்பு / மதிய உணவு

அனைத்து ஆரம்ப நிலை மற்றும் நடுநிலைப் பள்ளி பள்ளிகளில் அல்லது அதன் மிக அருகில் நாள் கட்டமைப்புகள் (Tagesstrukturen) உள்ளன. நாள் கட்டமைப்பு என்பது மதிய உணவு நேரத்தில் குழந்தைகள் பள்ளியில் தங்கி மதிய உணவைப் பெறுவதைக் குறிக்கிறது. பள்ளிக்குப் பிறகு, ஒரு நபர் குழந்தைகளை கவனித்துக்கொள்கிறார், குழந்தைகள் வீட்டுப்பாடம் செய்யலாம்.
உங்கள் குழந்தை நாள்கட்டமைப்பில் சேர வேண்டுமா?எனில் அதற்குப் பணம் செலுத்த வேண்டும். செலவு நீங்கள் எவ்வளவு சம்பாதிக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது. உங்கள் பிள்ளை வாரத்தில் ஒரு நாள் அல்லது பல நாட்கள் நாள்கட்டமைப்பிற்குச் செல்லலாம்.

## பராமரிப்புக்குடும்பம்

உங்கள் குழந்தையை நீங்கள் ஒரு குழந்தை பராமரிப்பாளர் பார்த்துக் கொள்ளுமாறு விடலாம். ஒரு குழந்தையைப் பராமரிக்கும் நாள் குடும்பம் (Tagesfamilie) என்பது நாள் முழுவதும் அல்லது பள்ளிக்கு முன்பும் பின்பும் குழந்தைகளை அழைத்துச் செல்லும் குடும்பம். பொருத்தமான குழந்தை பராமரிக்கும் நாள் குடும்பத்தைக் கண்டறிய முகவர் நிலையங்கள் உங்களுக்கு உதவும். குழந்தைகளை பராமரிக்கும் நாள் குடும்பத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பதை முகவர் நிலையங்கள் உங்களுக்குத் தெரிவிக்கும்.

## குழந்தையுடன் துணையாக இருப்பவர் / அவசர சந்தர்ப்பங்கள்

சுவிட்சர்லாந்தில், இளைஞர்கள் மாலை அல்லது வார இறுதி நாட்களில் குழந்தை பராமரிப்பாளர்களாகவும் பணியாற்றலாம். அதற்கு இளைஞர்கள் சம்பளம் பெறுகிறார்கள். ஏற்கனவே ஒரு படிப்பில் சேர்ந்து குழந்தை பராமரிப்பைக் கற்றுக்கொண்ட பராமரிப்பாளரை ஏற்பாடு செய்துத் தரும் முகவர் நிலையங்களில் பட்டியலை செஞ்சிலுவைச் சங்கம் Basel-Stadt (SRK) வைத்திருக்கிறது.
அவசரகாலத்தில் குழந்தை பராமரிப்பு
ஒருவேளை அவசர கால சூழ்நிலையாக இருந்து உங்கள் குழந்தையை கவனித்துக் கொள்ள யாராவது அவசரமாக வேண்டும் என்றிருந்தால். உதாரணமாக நீங்கள் அல்லது உங்கள் துணைவர் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும், உங்கள் குழந்தையை யாரும் கவனிக்க முடியாது. சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கம் Basel-Stadt (SRK) அவசரகாலத்தில் குழந்தை பராமரிப்பைக் கொண்டுள்ளது. கவனிப்புக்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டும். ஆனால் சில மருத்துவக் காப்பீட்டு நிறுவனங்கள் செலவுகளை ஏற்றுக் கொள்கின்றன.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/childcare

# குடும்பம் ஒன்றிணைதல்

நீங்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்கிறீர்கள் என்றால் உங்கள் குடும்ப உறுப்பினர்களும் சுவிட்சர்லாந்திற்கு இடம் பெயரல்லாம். இதற்கு சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். உங்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் உங்களை சுவிட்சர்லாந்தில் பார்க்க விரும்புகிறார்களா? எனில் அவர்கள் சில நேரங்களில் நுழைவு அனுமதி விசாவிற்கு விண்ணப்பிக்க வேண்டும் இது உங்கள் பார்வையாளர் எந்த நாட்டில் இருந்து வருகிறார் என்பதைப் பொறுத்தது.

## குடும்பம் ஒன்றிணைதல்

நீங்கள் இங்கு வசிக்கிறீர்கள் என்றால், உங்கள் நேரடி உறவினர்கள் அல்லது உங்கள் துணைவர் சுவிட்சர்லாந்துக்கு இடம் பெயர அனுமதி உண்டு (குடும்ப ஒருங்கிணைப்பு, Familiennachzug). உங்கள் குடும்பத்தில் எந்தெந்த உறுப்பினர்களுக்கு நீங்கள் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கலாம்? இது உங்கள் குடியுரிமை மற்றும் குடியிருப்பு அனுமதியைப் பொறுத்தது. நீங்கள் தற்காலிகமாக அனுமதிக்கப்பட்டு F அனுமதி பெற்றிருந்தால் உங்கள் குடும்பத்தினரும் உங்களைப் பின்தொடர முடியும்.
இடம்பெயர்வு அலுவலகம் (Migrationsamt) உங்கள் குடும்பம் உங்களுடன் சேரலாமா என்பதை தீர்மானிக்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் உங்களுக்கு என்ன ஆவணங்கள் தேவை என்பதை இடம்பெயர்வு அலுவலகம் உங்களுக்குத் தெரிவிக்கும்.
எச்சரிக்கை:
ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் உங்கள் குடும்பம் உங்களுடன் சேர நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும். இந்த கால அளவு பெரியவர்களை விட குழந்தைகளுக்கு குறைவாகவே உள்ளது. உதாரணமாக,உங்கள் துணைவர்.

## கல்யாணத்திற்கு ஆயத்தம் செய்தல்

நீங்கள் சுவிட்சர்லாந்தில் வசிக்கிறீர்கள், வெளிநாட்டில் உள்ள ஒருவரை திருமணம் செய்ய விரும்புகிறீர்களா? எனில் நீங்கள் நாட்டிற்குள் நுழைவதற்கான அனுமதிக்கு விண்ணப்பிக்கலாம்,இன் மூலம் நீங்கள் திருமணத்தைத் தயார் (Vorbereitung der Heirat) செய்ய முடியும்.
உங்கள் துணைவர் நாட்டிற்குள் நுழையலாமா என்பதை இடம்பெயர்வு அலுவலகம் (Migrationsamt) தீர்மானிக்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் உங்களுக்கு என்ன ஆவணங்கள் தேவை என்பதை அலுவலகம் உங்களுக்குத் தெரிவிக்கும்.

## நுழைவு விசா

உங்கள் தாய் நாட்டிலிருந்து உங்கள் உறவினர்கள் அல்லது தெரிந்தவர்கள் உங்களை சுவிட்சர்லாந்தில் சந்திக்க விரும்புகிறார்களா? எனில் அவர்களுக்கு சுவிட்சர்லாந்துக்கு நுழைவு விசா வேண்டும். பல நேரங்களில் விசா பெறுவது எளிதானதல்ல. சில நேரங்களில் உங்கள் பார்வையாளர்கள் நீங்கள் எழுதிய அழைப்புக் கடிதத்தைக் காட்ட வேண்டும். அல்லது பார்வையாளர்கள் தாங்களே தங்களுக்கு நிதி உதவி செய்து கொள்ள முடியும் என்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும் (உறுதிப் பிரகடனம், Verpflichtungserklärung).
வெளிநாட்டில் உள்ள சுவிஸ் தூதரகம் மக்கள் விசா பெற முடியுமா என்பதைத் தீர்மானிக்கிறது. உங்கள் பார்வையாளர்கள் என்ன செய்ய வேண்டும் மற்றும் அவர்களுக்கு என்ன ஆவணங்கள் தேவை என்பதைப் பற்றிய தகவலைத் தூதரகம் வழங்குகிறது. இடம்பெயர்வு அலுவலகத்திலிருந்தும் (Migrationsamt) நீங்கள் தகவலைப் பெறலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/family-reunification

# மோதல்

உங்கள் கூட்டு வாழ்க்கையில் அல்லது குடும்பத்தில் உங்களுக்கு மோதல்கள் மற்றும் சண்டைகள் உள்ளதா? எனில் பல்வேறு ஆலோசனை மையங்கள் உங்களுக்கு மேற்கொண்டு உதவும். குடும்பத்தில் மற்றும் துணைவர்களுக்கு இடையே வன்முறை தடை செய்யப்பட்டுள்ளது. "Hallo Basel-Stadt"இல் குடும்ப வன்முறை பற்றிய ஒரு தனி அத்தியாயமே உள்ளது. அங்கு நீங்கள் இத்தலைப்பில் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

## சேர்ந்து வாழ்பவர்களிடையே மோதல்

உங்கள் கூட்டு வாழ்க்கையில் உங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தால் நீங்கள் நிபுணர்களிடமிருந்து உதவி பெறலாம் (திருமண ஆலோசனை, Eheberatung). உங்களுடன் இணைந்து தீர்வுகளைக் கண்டறிய சிறப்பு ஆலோசனை மையங்கள் உள்ளன. பெரும்பாலும் முதல் கலந்துரையாடல் இலவசம் அல்லது அதற்குக் குறைவான கட்டணம் செலுத்த வேண்டும்.

## குடும்பத்திற்குள் மோதல்

உங்களுக்குக் குழந்தைகள் இருக்கிறார்கள் எனில் சில நேரங்களில் இது கடினமான சூழ்நிலைகளைக் கொடுக்கலாம். இது ஒரு பெற்றோராக உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது. நீங்கள் மேற்கொண்டு எப்படி செல்வது என்று தெரியவில்லை என்றால் உதவி பெறுவது சிறந்தது.
பெற்றோருக்கான உதவி:

- குடும்ப ஆலோசனை மையத்தில் (Familienberatungsstelle) தனிப்பட்ட ஆலோசனைகளைப் பெறலாம்.
- உங்களுக்கு வளர்ப்பைப் பற்றி ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது உங்கள் குழந்தைகளைப் பற்றி ஏதேனும் கவலைகள் இருந்தால் நீங்கள் பெற்றோர் அவசர தொலைபேசி எண்ணில் 0848 35 45 55 தொடர்பு கொள்ளலாம் (சாதாரண தொலைபேசி கட்டணத்தைச் செலுத்துவீர்கள்) அல்லது மின்னஞ்சல் மூலம் நிபுணர்களிடமிருந்து ஆலோசனைகளைப் பெறலாம்.

குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு:

- குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் குழந்தைகளுக்கான அவசரகால ஹாட்லைனை அழைக்கலாம், மின்னஞ்சல் அல்லது குறுஞ்செய்தி எழுதலாம் அல்லது அரட்டையடிக்கலாம். தொலைபேசி: 147 (அழைப்பு இலவசம்).

## வீட்டில் வன்முறை

குடும்பத்தில் வன்முறை அதிகாரப்பூர்வமாகக் குற்றம் மேலும் அது தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவர் வன்முறையைக் கையில் எடுத்தால், அவர் தண்டனைக்குரியவர் ஆகிறார். எந்த விதமான வன்முறையும் தடைசெய்யப்பட்டுள்ளது.குடும்பத்தில் உள்ள மற்றவர்களுக்கு எதிராக யாரும் வன்முறையைப் பயன்படுத்தக்கூடாது: மனைவி, கணவன் அல்லது குழந்தைகளுக்கு எதிராக அல்ல. குடும்ப வன்முறை பற்றி அதிகாரிகள் அறிந்தால், அவர்கள் செயல்பட வேண்டும்.
உங்கள் குடும்பத்தில் நீங்கள் வன்முறையை அனுபவிக்கிறீர்களா? நீங்கள் ஆதரவைப் பெறக்கூடிய சலுகைகள் உள்ளன. சலுகைகள் இலவசம் மற்றும் நம்பிக்கைக்குரியது.

- Frauenhaus / Väterhaus: பெண்கள் அல்லது ஆண்கள் வன்முறையை அனுபவித்தால், அவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பெண்கள் தங்குமிடம் அல்லது ஆண்கள் தங்குமிடம் செல்லலாம். அவர்கள் தங்கள் குழந்தைகளுடன் அங்கு புகலிடம் தேடலாம். பெண்கள் இரவும் பகலும் பெண்கள் தங்குமிடத்தை அழைக்கலாம். தொலைபேசி: 061 681 66 33.

- குழந்தைகளுக்கான அவசர எண்: குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் குழந்தைகளின் அவசர எண்ணை அழைக்கலாம். அழைப்பு இலவசம். தொலைபேசி: 147.

- உங்கள் குடும்பத்தில் ஒருவரால் நீங்கள் அச்சுறுத்தப்படுவதாக உணர்கிறீர்களா? எனில் காவல்துறையை அழைக்கவும். தொலைபேசி: 117. காவலர் குற்றவாளியை அடுக்குமாடி குடியிருப்பில் இருந்து அல்லது வீட்டிலிருந்து நீண்ட காலத்திற்கு வெளியேற்ற முடியும். அதன் பிறகு குற்றவாளி அபார்ட்மெண்ட் அல்லது வீட்டிற்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை.

"Hallo Basel-Stadt" குடும்ப வன்முறை பற்றிய அதன் தனி அத்தியாயத்தைக் கொண்டுள்ளது. அங்கு நீங்கள் இத்தலைப்பில் கூடுதல் தகவல்களைக் காணலாம்.

## மேலதிகத் தகவல்கள் (இணைப்புகள், விலாசம், பிரசுரம், அறிவித்தல்)

www.hallo-baselstadt.ch/ta/partnership-and-children/conflicts